THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No. 169/2017** | **PW.1** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. மஞ்சு தேவி | |
| Husband Name | : திரு. முத்துக்குமார் | |
| Village | :தண்டையார்குளம் | |
| Taluk | :இராதாபுரம் | |
| Employment | :ப்யூட்டி பார்லர் வேலை | |
| Age | : 34 | Date:25.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A3 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**முதல் விசாரணை :–**

1. நான் தண்டையார்குளத்தில் வசித்து ப்யூட்டி பார்லரில் வேலை செய்து குடியிருந்து வருகிறேன். வழக்கின் 3 வது எதிரியை எனக்கு தெரியும். எனது மாமியார். 1 வது எதிரி எனது கணவர். 2 வது எதிரி எனது மாமனார். 1,2 எதிரிகள் இறந்து விட்டார்கள். எனக்கும் 1 வது எதிரிக்கும் கடந்த 30.08.2007 அன்று திருச்செந்தூர் முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. அப்போது எனக்கு 40 பவுன் தங்க நகைகள் மற்றும் எனது கணவருக்கு இருசக்கர வாகனம் மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களும் எனது பெற்றோர்கள் திருமணத்தின் போது கொடுத்தார்கள்.

2) திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவர் மற்றும் மாமனார், மாமியார் அனைவரும் சென்னையில் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம். திருமணத்தின் பயனாக 2008 ம் வருடம் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பெயர் ரித்விக் நாச்சியப்பன். பின்னர் 2011 ம் வருடம் மற்றொரு ஆண் குழந்தை

பிறந்தது. குழந்தை பெயர் திருவிக்ரம். இரண்டாவது குழந்தை பிறந்த பிறகு எனது மாமியார் 2012ம் வருடம் முதல் எனது மாமனாரின் தூண்டுதலின் பேரில் என்னை சந்தேகப்பட்டு எனது கணவரிடம் சொல்லி கொடுத்து வந்தார். பின்னர் 1 வது எதிரிக்கு வேறு ஒரு நபருடன் பழக்கம் ஏற்பட்டு எங்கள் முதல் குழந்தை அவர்கள் வாங்கி கொண்டு என்னை வீட்டை விட்டு 2013ம் வருடம் அனுப்பிவிட்டார்கள். எட்டு வருடமாக எனது மூத்த மகன் என்னுடன் இல்லை.

3) எனது கணவர் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டார். நான் 2013 முதல் பூனாவில் எனது பெற்றோருடன் வசித்து வந்தேன். 2014ம் வருடம் எனது கணவர் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டது தெரியவந்தது. அதை கேட்ட போது என்னிடம் கூடுதலாக வரதட்சணை கேட்டார்கள். அதன் பின்னர் எனது மூத்த மகனை கேட்டேன். அவர்கள் தரவில்லை. எங்கள் வீட்டில் கொடுத்த நகைகள் மற்றும் பணத்தை அவர்கள் தரவில்லை. பாதி நகைகளை அவர்கள் அடகு வைத்தை நாங்கள் மீட்டு விட்டோம், திருமண சமயத்தில் கொடுத்த பணத்தை எதிரிகள் தரவில்லை.

4) பின்னர் 2016ம் வருடம் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அங்கு நடவடிக்கை எடுக்ககாததால் காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன். பின்னர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

<u>**3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1) நான் தற்போது பெற்றோருடன் பூனாவில் வசித்து வருகிறேன். எனது பிறந்த தேதி 03.12.1992 ஆகும். எனது திருமணத்தின் போது கொடுத்த நகைகள் மற்றும் பொருட்கள் தொடர்பான ஆவணங்கள் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் நகைகள் அம்மாவின் பழைய நகைகள் என்பதால் ஆவணங்கள் இல்லை. எனது திருமணம் 2007 ம் வருடம் நடைபெற்றது.

திருமண சமயத்தில் எனக்கு 15 வயது என்றால் சரிதான். நான் அப்போது 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பெண்ணின் திருமண வயது எனது பெற்றோருக்கு தான் தெரியும். சென்னையில் ஆறு வருடம் குடியிருந்தோம். எனது மாமனார், மாமியார் ஆறு வருடமும் என்னுடன் தான் இருந்தார்கள்.

2) வரதட்சணை கொடுமை திருமண சமயத்தில் நடந்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் நகைகளை திருமணம் முடிந்து ஒரு வருடத்திற்குள் வாங்கிவிட்டார்கள் தேதி தெரியாது. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வரதட்சணை கொடுமை முதல் குழந்தை பிறந்தபிறகு தான் நடந்தது. முதல் குழந்தை 2008 ம் வருடம் பிறந்தது. நான் மாவட்ட கண்காணிப்பளாரிடம் கொடுத்த புகார் மனுவில் 1 முதல் 3 எதிர் மனுதாரர்களின் முகவரி அண்ணா நகர், பணகுடி என உள்ளது என்றால் சரிதான். வரதட்சனை கொடுமை நடந்தது சென்னையில் என்றால் சரிதான். நான் தண்டையார்குளத்தில் 2015ம் வருடம் வசிக்கவில்லை. எனது பெற்றோருடன் பூனாவில் தான் வசித்தேன்.

3) நான் தண்டையார்குளத்தில் வசித்த வந்த போது 23.01.2015 அன்று எனது ஆண் நண்பர் கண்ணன் என்பவருடன் வி.கே புரத்திற்கு சென்று தங்கினேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக பணகுடி காவல் நிலையத்தில் குற்ற எண்.31/2015 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அதற்கானது என்றால் சரிதான் அது புகார்தாரர் எனது அப்பா சுடலைகண்ணு என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் நீதிமன்ற விசாரணை வாக்குமூலத்தில் எனது அப்பா "நானும் எனது குடும்பத்தாரும் அவளை சமாதானம் செய்ய வற்புறுத்திய போது எங்களுக்கு யாருக்கும் தெரியாமல் மூன்று வயது மகனை அழைத்து கொண்டு எங்கோ சென்று விட்டார் என கூறியுள்ளார் என்றால் சரிதான்." என்னை பணகுடி போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள் என்றால் சரிதான் அப்போது நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

4) அதன் பின்னர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது காவல் ஆய்வாளர்களிடம் 23.01.2015ம் தேதி இரவு 7.00 மணியளவில் எனது நண்பர் ஆறுமுகத்திடம் தகவல் சொல்லி அவரது நண்பர்களான கண்ணன் மற்றும் துரை ஆகியோருடன் எனது மகனை கூட்டி கொண்டு வி.கே புரத்தில் உள்ள அவரது நண்பர் வீட்டில் தங்கினோம் என்று கூறினேன் என்றால் சரியல்ல. கண்ணன் என்பவருடன் தான் நான் தங்கியிருந்தேன் என்றாலும், நீதிமன்ற விசாரணையிலும், ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது மூத்த மகன் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். வீட்டை விட்டு சென்று 1 1/2 நாள் கழித்து வந்தேன். பின்னர் நான் எனது அப்பாவீட்டிற்கு செல்லமாட்டேன் என்று சொல்லியதால் என்னை நான்குனேரி ஹோமிற்கு அனுப்பினார்கள்.

5) 1,2 எதிரிகள் கொடுமை செய்தார்கள். மாமியார் என்னை கொடுமை செய்யவில்லை. எனது மூத்த மகன் 7, 8 வருடமாக எனது கணவருடன் தான் இருந்தார். என்னை கொடுமை செய்தது சம்பந்தமாக மருத்துவமனை சிகிட்சை எடுத்து கொள்ளவில்லை. எனது கணவருடன் சேர்ந்து வாழ நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை. 1,2 எதிரிகள் தற்போது உயிருடன் இல்லை. எனது கணவர் சென்னையில் தனியார் நிறுவனத்தில நல்ல வேலை பார்த்து இருந்தார்ள ன்றால் சரிதான். அவர் இறந்த பிறகு கிடைக்க வேண்டி பண பலன் ரூ. 25 லட்சம் தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது கணவர் வழக்கு தாக்கல் செய்த போது எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்று தெரியாது.

6) கடைசியாக நான் பிரியும் போது ரூ. 45,000/- வாங்கினார். புகார் மனுவில் சம்பவம் பணகுடி அண்ணா நகர் என கூறியுள்ளேன் என்றால் அவர்களது நிரந்தர முகவரி அது என்பதால் கூறியுள்ளேன். விசாரணை அதிகாரியிடம் சம்பவம் நடந்த இடம் கூறினேனா என்றால் கேட்டு இருந்து இருந்தால் கூறியிருப்பேன். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்று இருந்தால் சென்னையில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது சுய

விருப்பதால் பிரிந்து சென்றேன் என்றாலும், பண பலனை பெற வேண்டி பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 4 வது எதிரியுடன் 1 வது இருந்ததை நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி நான் பொய் புகார் கொடுத்ததால் 4 வது எதிரியை குறைவு செய்ததார் என்றால் சரியல்ல. 2008 ம் வருடம் நடந்தததாக சொல்லும் சம்பவத்த்ற்கு 2016 ம் வருடம் புகார் கொடுப்பது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2015 ம் வருடம் நான் எனது கணவரும் விவாகரத்து ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

7) அந்த ஒப்பந்தத்தில் எனது மூத்த மகனை எனது கணவருடம் இளைய மகனை என்னுடன் வைத்து கொள்வதாக ஒப்பந்தம் செய்தோம் என்றால் சரியல்ல. திட்டமிட்ட பொய்யான சங்கதிகளை கூறி புகார் கொடுத்ததால் தான் காவல் நிலையத்தில வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பண பலன் பெற வேண்டி பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH
Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.09.25 19:12:40 +0530

Judicial Magistrate,
Valliyoor.